# 41. **பந்தயத்தின் கடைசிக் கட்டத்தை நிர்வகித்தல்**

டாக்டர். மோகன், நாடு முழுவதும் பணிபுரியும் மேலாளர்களுக்காக மற்றொரு புத்தகத்தை வடிவமைக்கத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருந்தார். அவர்களில் பலர் முறையான மேலாண்மைக் கல்வியைப் பெற வாய்ப்பு இல்லாதவர்களாகவும் அனைத்து மேலாளர்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும் மற்றும் இந்தியாவில் உள்ள அனைத்து அங்கீகரிக்கப்பட்ட மேலாண்மைத் திட்டங்களிலும் ஒரு கட்டாயப் படிப்பான வியூக மேலாண்மைப் பாடத்தைப் பற்றிய எந்தப் புரிதலும் இல்லாதவர்களாக இருந்தனர்.

புத்தகத்தைப் பயனருக்கு வழங்குவதில் ஏற்படும் சிக்கல்: புத்தகத்தை வடிவமைத்த பிறகு, ஆன்லைன் விநியோகத்திற்காக அச்சுப்பொறியின் இணையதளத்தில் பதிவேற்றினார். மின் புத்தகமும் பதிவேற்றம் செய்யப்பட்டது. பின்னர் தமது பெங்களூரு முகவரியில் புத்தகத்தை ஆர்டர் செய்தார். புத்தகம் 3-5 நாள்களுக்குள் அச்சிடப்படவில்லை, எட்டு நாள்கள் ஆயின, இதன் விளைவாக அது எதிர்பார்த்த நேரத்திற்குள் வரவில்லை. 12 நாள்களுக்குப் பிறகு அது முகவரியை அடையும் நேரத்தில், டாக்டர் மோகன் பெங்களூரிலிருந்து லக்னோவுக்குச் சென்றுவிட்டார்.

அக்டோபர் எட்டாம் தேதி லக்னோவில் புத்தகத்தை வெளியிட அவர் திட்டமிட்டிருந்தார். எனவே, எதிர்பார்ப்பில், அவர் மற்றொரு நகலை அச்சிட்டு லக்னோ முகவரிக்கு வழங்க உத்தரவிட்டார். இந்த முறை புத்தகம் குறிப்பிட்ட நேரத்திற்குள் அச்சிடப்பட்டு அக்டோபர் ஐந்தாம் தேதி FedEx கூரியர் மூலம் அனுப்பப்பட்டது. அக்டோபர் ஏழாம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை ஐந்து மணிக்குப் புத்தகம் IMP-இன் நூலகரிடம் வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டது. ஆனால், நூலகர், விசாரணையில் புத்தகம் வரவில்லை என்று கூறி ஆச்சரியமடைந்தார். FedEx மற்றும் Publisher-இல் யாராலும் புத்தகம் எங்குச் சென்றது என்பதை விளக்கவும் உதவவும் முடியவில்லை. புத்தகத்தைப் பெற்றுக் கொண்டதாக விநியோக நகலில் காட்டப்பட்ட கையொப்பம் தம்முடையது என்பதை நூலகர் மறுத்தார் . நூலகத்தில் டெலிவரி செய்ய, ஒன்று பிரதான வாயிலிலும் மற்றொன்று நூலகப் பாதுகாப்பு வாயிலிலும் என இரண்டு பாதுகாப்புச் சோதனைகளையும் கடந்து செல்ல வேண்டும். கேமராவிலிருந்து யாரும் இரண்டு பாதுகாப்பு வாயில்களைக் கடந்ததற்கான எந்தப் பதிவும் காணப்படவில்லை. அதனால் புத்தக வெளியீடு ஒத்திவைக்கப்பட்டது. அந்த அனுபவம் டாக்டர் மோகனுக்கு மிகவும் அதிர்ச்சியாக இருந்தது. அவர் தமது சொந்த நிறுவன நூலகத்திற்காக ஆர்டர் செய்த புத்தகம் இலக்கை அடையவில்லை என்றால், புத்தகங்களை ஆர்டர் செய்யும் மற்றவர்கள் கதி என்னவாகும்? மின்னஞ்சல் மூலம் மட்டுமே தொடர்பு கொள்ளக்கூடிய பிரிண்டர் மூலம் தமது புத்தகங்களை ஆன்லைனில் ப்ரீபெய்ட் டெலிவரி செய்வதில் அவர் நம்பிக்கை இழக்கத் தொடங்கினார் (தனிப்பட்ட தொடர்பு அல்லது தொலைபேசி / மொபைல் தொடர்பு எதுவும் இல்லை).

சுமார் மூன்று வாரங்கள் அச்சிடுபவர்கள் புதிய நகலை அனுப்புவதாகத் தெரிவித்தனர். விரைவுத் தபால் மூலம் அனுப்புமாறு டாக்டர் மோகன் கேட்டுக் கொண்டார். புத்தகம் 24-ஆம் தேதி அனுப்பப்பட்டு 27-ஆம் தேதி லக்னோவை அடைந்தது, ஆனால் தபால் நிலையத்தில் ஐந்து நாள்கள் கணினி செயலிழந்ததால் 1.11.18 அன்றுதான் டெலிவரி செய்ய முடிந்தது. டாக்டர் மோகனுக்கு 2.11.18 அன்று வகுப்பு இருந்தது. முனைவர் பட்ட மாணவர்களுடன், ஒரு புத்தகத்தை எவ்வாறு வெளியிடுவது என்பதை விளக்க விரும்பினார். புத்தகம் நூலகத்திற்கு டெலிவரி செய்யப்பட்டதைத் தபால் துறையிடமிருந்து கேட்டதும், உடல்நிலை சரியில்லாததால் தம்மால் கார் ஓட்ட முடியவில்லை எனவே டாக்ஸியை வாடகைக்கு எடுத்து நூலகத்திற்கு விரைந்தார். இருப்பினும், உதவி நூலகர் டாக்டர் மோகன் வாங்கி நூலகத்திற்கு அனுப்பிய புத்தகத்தைக் கொடுக்க மறுத்துவிட்டார், புத்தகத்திற்கு முதலில் ஒரு சேர்க்கை எண் கொடுக்கப்பட வேண்டும், அதற்கு டீனின் (ஆராய்ச்சி) ஒப்புதல் தேவை, இது அனைத்திற்கும் 4-5 நாள்கள் ஆகும். அடுத்த நாள் வகுப்பிற்குப் புத்தகம் வேண்டும் என்று கூறியும் பிடிவாதமாக உதவி நூலகர் ஒப்புக்கொள்ளவில்லை. நூலகரும் இல்லை, அவரை எப்போது, எங்குத் தொடர்பு கொள்ளலாம் என்று யாராலும் பதிலளிக்க முடியவில்லை. டாக்டர் மோகன் பேசக்கூடிய டைரக்டர் ஐசியூவில் இருந்தார். துரதிர்ஷ்டவசமாக அன்று மாலை அவர் இறந்தார், அடுத்த நாள் வகுப்பு நடக்கவில்லை.

இதற்கிடையில், “வீர் நர்மத்” பல்கலைக்கழகத்தின் துறைத் தலைவர், சூரத் விலைப் பட்டியல் தேவைப்படும் சில புத்தகங்களை வாங்க விருப்பம் தெரிவித்தார். டாக்டர் மோகன்

அவர்களுக்காக இரண்டு புத்தகங்களை ஆர்டர் செய்து, பாராட்டு நகல்களாக அனுப்பினார். புத்தகங்கள் FedEx மூலம் அச்சிடப்பட்டு அனுப்பப்பட்டது. இம்முறையும் புத்தகம் கைக்கு வரவில்லை. டெலிவரிபாய் சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு வந்ததாகவும், அலுவலகம் மூடப்பட்டது என்ற குறிப்புடன் புத்தகத்தைத் திரும்பக் கொண்டு சென்றதாகவும் வலைக் கண்காணிப்புக் காட்டியது.

டாக்டர் மோகன் இப்போது பதற்றமடைந்தார். உலகளாவிய புகழ்பெற்ற கூரியர், லக்னோ மற்றும் சூரத் போன்ற முக்கிய நகரங்களில் உள்ள முன்னணி நிறுவனங்களுக்குப் புத்தகங்களை வழங்கவில்லை என்றால், அவரது புத்தகங்களின் ஆன்லைன் விற்பனை முடிவுக்கு வரும். புத்தகங்கள் சரியான நேரத்தில் பயனரைச் சென்றடையவில்லை என்றால், புத்தகங்களை எழுதுவதில் என்ன பயன்? "சில மாற்று வழிகளைக் கண்டறிய வேண்டும்", "இந்திய அனுபவ அடிப்படையிலான இலக்கியம் பற்றிய அவரது கனவு, எஸ்.எம் கல்வி விஷயங்கள் வெறும் கனவாகவே இருக்கும்" என்று அவர் உணர்ந்தார். ரஃபேல் டீல் ஆஃப்செட் ஷரத்து நாட்டில் விவாதிக்கப்பட்டு, மாநிலத் தேர்தல்களில் மத்தியில் ஆளும் கட்சி தோல்வியடைந்தபோது, இந்தியச் சமுதாயத்தில் பரவலான தாக்கங்கள் குறித்து அவர் அதிகக் கவலை கொண்டிருந்தார்.

## நீங்களாகவே செய்யுங்கள் என்ற எண்ணத்தை உருவாக்குதல்

சில தூக்கமில்லாத இரவுகளுக்குப் பிறகு, ஒரு நாள் அவருக்கு ஒரு யோசனை தோன்றியது, புத்தகத்தை ஒருவரே அச்சிட்டுப் பிணைத்தால், அதை உறுதியாகச் செய்வது அவருக்கு எளிதாக இருக்கும். எனவே, அவர் அச்சுப் பொறிகளுக்காகப் பதிவேற்றிய கோப்பினைப், பயண முகவர் மற்றும் அவரது உதவியாளர் உதவியுடன் தமது பயண முகவரின் ஜெராக்சிங் இயந்திரத்தில் அச்சிட முயன்றார். ஆனால் ஐயோ! அது A4 அளவு முழுப் பக்க அச்சிடலில் இருந்தது, பெரிய எழுத்து அளவைக் கொண்டிருந்ததால், பழைய நிர்வாகி கூடப் படிக்க முடியும். அவர் இன்னொரு முயற்சியையும் செய்தார்.

புத்தகத்தில் உள்ளதைப் போல அச்சிடுபவர்களால் எவ்வாறு பக்கத்தை அச்சிட முடிகிறது என்று அவர் ஆச்சரியப்பட்டார். மேலும் சில வேதனையான நாள்கள் கழிந்தன. பல சோதனைகள் மூலம் அவர் ஜெராக்ஸ் இயந்திரம் "அதிகமான பக்கங்களைச் சுருக்கவும்" என்னும் அமைப்பைக் கொண்டுள்ளது என்று அறிந்து கொண்டார். தளவமைப்பில் A4 அளவுக் காகிதத்தைத் தேர்ந்தெடுத்து மேலே உள்ள அமைப்பைத் தேர்ந்தெடுத்தார். இம்முறை அச்சானது, புத்தகத்தில் இருந்த அதே அளவில் இருந்தது, ஆனால் பக்கத்தின் மையத்தில், பக்கத்தை நான்கு பக்கங்களிலும் வெட்டினால் குறைக்க முடியும். ஆனால் அதனை எப்படி வெட்டுவது என்பதில் சிக்கல் வந்தது. காகிதக் கத்தி ஒன்றை வாங்கினார். அது பயனுள்ளதாக இருந்தது, இருந்த போதும் இயந்திரம் வெட்டும் நுட்பத்தை அடைய முடியவில்லை. அவர் புத்தகப் பைண்டர்களைக் கண்டுபிடிக்க முயன்றார், ஆனால் அவரது வீட்டிலிருந்து தொலைவில் அவை அமைந்திருந்தன, உடல்நிலை சரி இல்லாத காரணத்தால் அவரால் வாகனம் ஓட்ட முடியவில்லை மற்றும் புக்-பைண்டர்களை அணுகினால் டாக்ஸிக் கட்டணங்கள் மற்றும் வெட்டுக் கட்டணங்களும் செலவாகும்.

அட்டைகளை உருவாக்குவதும் ஒரு கடினமான பணியாக நிரூபிக்கப் பட்டது. பல நாள் முயற்சிகளுக்குப் பிறகு அவர் ஒரு நிலையான அமைப்பைக் கண்டுபிடிக்க முடிந்தது. அவரது பயண முகவர்கள் இயந்திரத்தில் அச்சிடப்பட்டாலும், A3 அளவு வண்ண அச்சின் கூர்மை அடையப்படவில்லை. ஒவ்வொரு முறையும் அவர் அருகில் இல்லாத, நிறுவப்பட்ட பிரிண்டர்களுக்குச் செல்ல வேண்டியிருந்தது. ஆனால் நகரின் ஒவ்வொரு பகுதியிலும் A3 அளவு பளபளப்பான காகிதத்தில் அச்சிடக்கூடிய ஒரு பிரிண்டர் இருப்பதைக் கண்டார். எனவே நிம்மதியாக இருந்தார். புத்தகத்தின் மென்பிரதியை இணையத்திலிருந்து பயனர் பெற்றால், அதனைப் பதிவிறக்கம் செய்து, எந்தச் சாலையோர ஜெராக்சிங் சர்வீஸ் பாயிண்டிலும் பரிந்துரைக்கப் பட்ட அமைப்புகளுடன் அச்சிட்டு, அதைப் பிணைக்க முடியும், அவரே புத்தகத்தை உருவாக்க முடியும். ஸ்பைரல் பைண்டிங் விருப்பங்கள் எப்போதும் இருந்தன, இது வழக்கமான எம்.பி.ஏ திட்டங்கள் மற்றும் மேலாண்மை மேம்பாட்டுத் திட்டங்களில் பங்கேற்பவர்களுக்குப் புத்தகத்தை விநியோகிக்கப் பயன்படுத்தப்படலாம். தேவைக்கேற்பக் கூடுதல் பொருளைச் சேர்க்க இது பயனரை அனுமதித்தது (பொருள் அதே தளவமைப்பு அமைப்பில் இருந்தால்).

பல ஜெராக்சிங் கடைகளில் கிடைக்கும் ஹெவி டியூட்டி ஸ்டேப்ளிங் இயந்திரத்தைப் பயன்படுத்துவதன் மூலம் சாஃப்ட் கவர் பிணைப்பதில் உள்ள சிக்கலைச் சமாளிக்கலாம். அச்சிடப்பட்ட புத்தகத்தை நீண்ட விளிம்பின் இடது பக்கத்தில், இருந்து சுமார் 3.5 செமீ தொலைவில் வைத்து, அதன்பின் விளிம்பில் 2.7 செமீ துண்டாக வெட்டப்பட்டவுடன், வண்ண 3 அளவு அச்சிடப்பட்ட அட்டையை அதே இடத்தில் ஒட்டலாம், பின் முழுப் புத்தகத்தை மற்ற மூன்று பக்கங்களிலிருந்தும் வெட்டிக் கொள்ளலாம் (விளிம்பு-களிலிருந்து 3 செ.மீ.) அது ஒரு முறையான புத்தகத்தின் வடிவத்தைக் கொடுத்தது, ஆன்லைனில் வாங்குவதன் மூலம் இது கிடைக்கும். இருப்பினும் இதற்கு ஒரு நல்ல தரமான “காகிதம் வெட்டும் கத்தி” தேவைப்பட்டது, (இல்லையெனில் விளிம்பு சற்றுக் கரடுமுரடானதாக இருக்கலாம்), மற்ற நன்மைகளைக் கருத்தில் கொண்டு, இது அதிகம் தேவையில்லை. புத்தகப் பைண்டிங் கடை அருகில், ஹெவி டியூட்டி கட்டிங் மெஷின் இருந்தால், புத்தகம் பதிப்பகத்தின் அச்சுப்பொறியில் இருந்து வந்தது போன்று நன்றாக இருக்கும்.

## “அதை நீங்களே செய்யுங்கள்” குறித்த பொருளாதாரம்

274 பக்கங்கள் கொண்ட புத்தகத்தைத் தயாரிப்பதற்கான அச்சிடும் செலவு ரூ. 0.60 முதல் ரூ. 1.00 ஒரு பக்கத்திற்கு, அடுத்தடுத்து, (அதாவது, ரூ. 165 முதல் சுமார் ரூ. 247 முழு புத்தகத்திற்கும்). கவர் அச்சிடுவதற்கான செலவு ரூ. 15 முதல் ரூ. 40 வரை, வெட்டும் செலவு சுமார் ரூ. 10 ஆகும் வெளியில் செய்தால். ஒருவரால் தயாரிக்கப்பட்ட புத்தகத்தைப் பெறுவதற்கான மொத்தச் செலவு ரூ. 190 முதல் ரூ.324 வரை இருக்கும். புத்தகத்தின் விலை ரூ.300/- பேப்பர்பேக் மற்றும் ஆன்லைனில் வாங்கலாம், இது தவிர டெலிவரிக் (கூரியர்) கட்டணம் ரூ.70 முதல் 100 வரை ஆகும். வாடிக்கையாளருக்கான செலவு ரூ. 370 முதல் ரூ. 400 வரை. விலையைக் குறைவாகவும் முழு எண்ணிக்கையிலும் வைத்திருக்க ஆசிரியர் தமது ராயல்டியை ரூ.7-க்குக் குறைத்தார்.

## மற்ற நன்மைகள்: புத்தகத்தின் தனித்துவமான அம்சங்கள்

1. தற்செயலாக இது தேவைக்கேற்ப அச்சிடப்பட்ட புத்தகம் (கையிருப்பில் இருந்து அன்று). ஒருவர் தமது நிறுவனம் மற்றும் கல்வி/மேலாண்மை மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஏற்ற தனித்துவமான அட்டை வடிவமைப்பைக் கோரலாம். சரக்கு எடுத்துச் செல்லும் செலவுகள் பூஜ்ஜியமாக இருந்ததால் விலை குறைவாக இருந்தது. மேலும் புத்தகத்தின் ஒரு நகலுக்குப் பொருளாதாரம் தனித்தனியாக இருந்தது மொத்தமாக வாங்குவதிலிருந்து வெளிவரவில்லை.

.

2. சில அத்தியாயங்களைத் தேர்ந்தெடுத்து, மற்ற புத்தகங்களில் உள்ள அத்தியாயங்கள் மற்றும் வழக்குகளுடன் இணைத்துக் கவர்ச்சிகரமான அதேசமயம் குறைந்த விலைப் புத்தகங்களில் நிரல் பொருள்களை உருவாக்குவதன் மூலம் புத்தகத்தைத் தனிப் பயனாக்கலாம். உண்மையில் இது போன்ற சூழலில் பயிற்றுவிப்பாளர்கள் திருத்தியமைக்கப்பட்ட தங்கள் சொந்த வேலையைச் சேர்க்க முடியும்.

3. டெலிவரிக் கட்டணங்கள் நீக்கப்பட்டு, தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்குக் கணிசமான சேமிப்பு கிடைக்கும்.

4. இந்த முறை, கிடைக்கும் தன்மையில், உறுதி மற்றும் பெரும்பாலும் ஒரே நாளில் கிடைக்கும்.

5. பயனர் 10 புள்ளி எழுத்துருவைப் படிக்க முடிந்தால், புத்தகத்தை A4/2-இல் அச்சிடலாம், கையாளுதலின் எளிமையை அதிகரித்துச், செலவைக் கிட்டத்தட்ட மேலே உள்ள புள்ளிவிவரங்களில் பாதியாகக் குறைக்கிறது.

இந்த வடிவத்தில், சுழல் கட்டப்பட்ட பதிப்பில் வெற்றுப் பக்கங்களைக் கூடச் சேர்க்கலாம் பங்கேற்பாளர்கள் வகுப்பில் குறிப்புகளை எடுத்து, அனைத்தையும் ஒன்றாக வைக்கக் கூடிய நூல்.

சிறிய எழுத்துரு அளவைக் கொண்டு படிப்பது கடினமாக இருக்காது, ஏனெனில் இரண்டு மின் பதிப்புகளும் அச்சிடும் செலவிலிருந்து சேமிப்பு ரூ. 100 ஆகும்.

6. சுழல் கட்டப்பட்ட பதிப்பில், பாடநெறி/ நிரல்களின் போது தேவைக்கு ஏற்பப் பொருள் சேர்த்துக்கொள்ளலாம்.

7. ஒருவர் முழு புத்தகத்தையும் ஒரே நேரத்தில் அச்சிடத் தேவையில்லை. பயிற்சி வகுப்பு முன்னேறும்போது அத்தியாயங்களை சேர்த்திடுக!

அதனை நீங்களாகவே செய்யுங்கள் பதிப்பைப் பரிசோதித்த டாக்டர். மோகன், பந்தயத்தின் கடைசிக் கட்டத்தின் பிரச்சனை தீர்ந்தது மட்டுமல்லாமல், தாமதம் மற்றும் கடைசி நேரப் பிரச்சனைகளால் ஏற்படும் அவசர நிலையைக் கூடச் சமாளிக்க முடியும் என்பதால் நிம்மதி அடைந்தார்.

டாக்டர் மோகனை வியக்கவைத்தது எதுவென்றால், நாட்டின் தொலைதூர மூலையில் அமைந்துள்ள மற்றும் புரிந்து கொள்ள விரும்பும் பயனருக்காகப் புதிய விருப்பங்களை இந்தப் புத்தகம் உருவாக்கி உள்ளது.

இந்தியா போன்ற ஒரு பரந்த நாட்டில், பல்வேறு மதிப்பு முறைகள் மற்றும் விநியோகத்தில் முறையான தடைகளுடன், கடைசிக் கட்டத்தை நிர்வகிப்பதில் உள்ள சிக்கல்கள்கள் அவருக்குக் கசப்பான முறையில் உணர்த்தியது. கடைசிக் கட்டத்தைச் சமாளித்தால் ஒழிய அந்த வேலை முடிவடையாது, அது நஷ்டம் மற்றும் முதலீட்டில் சிக்கியது என்று அவர் உணர்ந்தார். நாட்டின் அரசியல்வாதிகள் கடைசிக் கட்ட நிர்வாகத்தில் உள்ள சிக்கல்கள்களைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார். இவற்றைப் புரிந்து கொள்ளாததால் தான் பல நல்ல திட்டங்கள் தோல்வி யடைகின்றன அல்லது தாமதமாகின்றன.

**Q**1. வணிகத்தின் கடைசிக் கட்டத்தை நிர்வகிப்பதில் என்ன சிக்கல் இருந்தது?

**Q**2. இத்தகைய பிரச்சனைகள் ஏன் ஏற்படலாம்?

**Q**3. இத்தகைய பிரச்சனைகளை எவ்வாறு தீர்க்க முடியும்? இந்திய மேலாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர் பாடம் ?

**Q**4. இந்த விஷயத்தில் காந்தியச் சிந்தனையின் பொருத்தம் என்ன?